# காஷ்மீர் 370

## ஒரு வரலாற்றுப் பிழை




ஆர். நடராஜன்

# காஷ்மீர் 370

## ஒரு வரலாற்றுப் பிழை

ஆர். நடராஜன்

ஆதாரம் வெளியீடு

A division of

Rare publications

சென்னை

காஷ்மீர் 370 ஒரு வரலாற்றுப் பிழை ஆர். நடராஜன் இரண்டாம் பதிப்பு: 2015

Kashmir 370 : A Historical Error R.Natarajan@Author

e-book Edition:2019

ISBN: 978-93-83826-47-6

Published by

Rare Books

**ஆதாரம் வெளியீடு**

A division of

**RARE Publications**

'Sri Padmavathi Nivas', 2nd Floor

#2/9,Dr.Sadhasivam Street,

Thyagarayanagar, Chennai -600017

E-mail: info@rarebooksonweb.com

Website:

www.rarebooksonweb.com

7010068836

காஷ்மீர் 370 ஒரு வரலாற்றுப் பிழை

Category: Current Affairs
E-Book Edition: 2019
Laser typeset by
PageDesigns, Chennai

# உள்ளே...

காஷ்மீரின் வரலாறு

அது என்ன 370-ஆவது பிரிவு?

நேருவின் பாரபட்சம்

அதிகாரத்தின் அக்ஷயபாத்திரம்

முன்னோர்கள் செய்த தவறு

நிச்சயம் முடியும்

# பதிப்புரை

பசுமை நிறைந்த ‘ஜம்மு காஷ்மீர்’ இன்னமும் ரத்தச் சிவப்பிலிருந்து மீளவில்லை. பாகிஸ்தான் ஏவிவிடும் மறைமுகமான வன்முறைதான் அதற்கு ஆதி காரணம். ஆளும் அரசியல்வாதிகளின் மதவெறி பாகிஸ்தானுக்கு ஆதாயம். இதை வகையாக எதிர் கொள்ளமுடியாதபடி மத்திய அரசின் கைகளைக் கட்டிப்போட்டிருப்பது நம் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு.

ஒரு இடைக்கால ஏற்பாடாக காஷ்மீருக்குச் சில சலுகைகளைத் தரும் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு நீட்டிக்கப்பட வேண்டும் என்கிறார்கள் தொடர்ந்து ஆதாயம் பெற விரும்பும் அந்த மாநில அரசியல்வாதிகள். காஷ்மீர் மக்களுக்கு நன்மை செய்யவில்லை என்பதால் அந்தப் பிரிவை நீக்க வேண்டியது அவசியமாகிறது.

அதை நீக்குவதற்கான வழி முறைகளை அலசுவதற்கு முன்பாக ஜம்மு காஷ்மீரின் வரலாற்றுப் பின்புலத்தைத் தெரிந்து கொள்வது துணைத் தலைப்பில் சொல்லப்

பட்டுள்ளது போல் பூகோளத்தின் வரலாற்றுப் பிழையை உணர்ந்துகொள்ள உதவும்.

ஜம்மு காஷ்மீரின் வரலாறு, இப்போதைய நிலை, சுதந்திர காலச் சிக்கல்கள், மக்களின் அவதிகள், அரசியல்

வாதிகளின் செழிப்பு ஆகியவற்றை விளக்குவதுடன் காஷ்மீரின் மீட்சிக்கான வழியையும் குறிப்பிடும் அரசியல் விமர்சகர் டாக்டர் ஆர். நடராஜன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

குறுகிய காலத்தில் எழுதப்பட்டு வெளிவரும் இந்த நூல் மக்களின் மனதை அசைக்குமானால், அதை ஒட்டி அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவு நீக்கப்படுமானால் சுதந்திரம் சமத்துவம் என்பதை உணர்ந்து மகிழ்வோம்.

பதிப்பாளர்




வலைத்தல வரைபடம். எல்லைக்கோடுகள் துல்லியமானவை என்று சொல்லமுடியாது

# காஷ்மீர் 370: ஒரு வரலாற்றுப் பிழை

பிரிட்டிஷ்காரர்கள் சுதந்திரத்தை நமக்கு வரமாகவும் சாபமாகவும் கொடுத்தார்கள். தம் வசதிக்காக அவர்கள் உருவாக்கிய ரயில்வே, தபால் துறை, அறிமுகப்படுத்திய ஆங்கில மொழி ஆகியன வரங்கள். இவற்றால் மக்கள் பயன் பெற்றார்கள்; தலைவர்கள் ஒன்றுபட்டார்கள். ஐம்பத்தியாறு பிரதேசங்களாக இருந்த இந்தியா ஒரே தேசமாகியது. அவர்கள் சென்றபோது இரண்டாகியது. இதுதான் அவர்கள் விட்டுச் சென்ற சாபம்.

பிரிட்டிஷார் நம் செல்வத்தைக் கொள்ளையடித்து,பண்பாட்டைச் சீர்குலைத்தார்கள் என்பது ஒரு காலத்தில் நாம் சுமத்திய குற்றச்சாட்டு. சுதந்திரம் பெற்ற பிறகு நம்மவர்களே இதைச் செய்துவருவதால் பிரிட்டிஷாரை இனிமேலும் குறை கூறும் தகுதி நமக்கு இல்லை.

தாம் ஆள முடியாத தேசத்தை, தம் அடிமைகள் ஆள்வதா என்ற நினைப்பில் சுதந்திரம் கொடுத்தபோதே பிரிட்டிஷ்காரர்கள் நம்மைப் பழிவாங்கி விட்டார்கள். இதுதான் உண்மை. நாட்டைப் பிரித்ததைச் சொல்லவில்லை. அதற்கு பிரிட்டிஷ்காரர்கள் அளவுக்கு நாமும் காரணம். எனவே அதை விட்டுவிடுவோம் பிரிட்டிஷாரின் வஞ்சகம்

வெளிப்பட்டது வேறு விதத்தில் என்பதை இப்போதாவது புரிந்து கொள்வோம்.

தான் காதலித்த பெண் இன்னொருவனை மணக்கப்போகிறாள் என்பதால் பொங்கித் துடிக்கும் வெறிபிடித்த காதலன் அவள் மீது அமிலம் வீசி அவள் முகத்தையும் வாழ்க்கையையும் சிதைத்த அதே கொடூ ரச் செயலை 1947ல் சிரித்தபடியே செய்தது பிரிட்டன்.

அப்போதைய மன்னர்களை அலங்காரத் தலைவர்களாக அங்கீகரித்தது, “நீங்கள் தான் பிரதமர், நீங்கள்தான் பிரதமர்” என்று சொல்லிக்கொண்டே சமீபகாலம்வரை இந் தியாவை சோனியா ஆளவில்லையா, அது போல பிரிட்டன் இந்தியாவை ஆண்டது. பிரிட்டிஷ் கால இந்திய ராஜாக்கள் சோனி யாவின் மன்மோகன் சிங் போன்று ஒப்புக்கு ராஜாக்களான தலையாட்டி பொம்மைகளே.

வெளியேறியபோது எல்லா சமஸ்தானங்க ளுக்கும் ஐதீக பூர்வமாக தனித்தனியாக சுதந்திரம் கொடுத்தது பிரிட்டன். யாருடன் இணைவது என்பது அந்தந்த சமஸ்தான மன்னர்களின் விருப்பம் என்றும் சொல்லி விட்டது. இந்த சமஸ்தானங்களை வெவ் வேறு காலகட்டங்களில், வெவ்வேறு உத்தி களில் பிடித்து நாட்டை ஒன்றாக்கி, பிறகு தனி சமஸ்தானங்களாக விட்டுச் சென்ற எதிரியின் ராஜதந்திரத்தையும் நாம் பாராட் டத்தான் வேண்டும்!

சுதந்திரம் தருவதற்கு முன்பே எல்லைகளை வகுப்பது, மக்களின் விருப்பத்தை அறிவது, மதக் கலவரம் இல்லாமல் இணைவது போன்ற அமைதிக்கான ஏற்பாடுகளை பிரிட்டன் செய்யவில்லை; செய்ய விரும்பவில்லை. தன் ஆட்சியிலிருந்து விடுபடும் சமஸ்தானங்களின் மன்னர்கள் பாகிஸ்தானுடனோ இந்தியாவுடனோ சேரலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் 1947 ஜூன் 3-ஆம் தேதிய அறிக்கையில் தெரிவித்தது. இது பாகிஸ்தானுக்கு ஆதரவாக பிரிட்டிஷ்காரர்கள் முஸ்லிம் லீகுடன் சேர்ந்து செய்த சதி. இந்த சமயத்தில் சோதா ராஜாக்கள் முரண்டுபிடித்து முறுக்கிக் கொண்டார்கள்.

ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்: தோட்டத்தில் பல இடங்களில் சிதறிக்கிடந்த நெல்லிக்காய்களை மூட்டையாகக் கட்டிய திருடன் வெளியேறும்போது தோட்டச் சொந்தக்காரனிடம் மூட்டையை அப்படியே கொடுத்து விட்டுப் போகாமல் மூட்டையைப் பிரித்து, காய்களைச் சிதறவிட்டு, ஒவ்வொரு நெல்லிக்காயிடமும் ‘முடிந்தால் ஏதாவது ஒரு சாக்குக்குள் போங்கள், அல்லது உருண்டு போய் தனியாக இருங்கள்’ என்று சொன்னால் எப்படி இருக்குமோ அப்படிச் சொன்னது பிரிட்டன். வரத்தின் பின்னே இருந்த சாபம் அது. அதிலிருந்துதான் காஷ்மீர் பிரச்சினை தொடங்கியது.

நான் நெல்லிக்காய் மூட்டை என்றதை ஆப்பிள்கூடை என்ற படேல் ‘அப்படியே கொடுங்கள் ஆப்பிள் கூடையை’ என்று மவுன்ட்பேட்டனிடம் கேட்டார். பிரிட்டன் கொடுக்கவில்லை. நமக்குக் கிடைத்தது சிதறிய ஆப்பிள்கள். மொத்தம் 562 சமஸ் தானங்களில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டி இருந்தவை 14. பிரச்சினை எழுந்தது காஷ்மீர், ஜுனாகத் மற்றும் ஹைதராபாத் என்ற மூன்று சமஸ்தானங்களில் மட்டும்.

இப்போதைய குஜராத்தை ஒட்டியிருந்த ஜுனாகத் 300 மைல்கள் தொலைவில் இருந்த பாகிஸ்தானுடன் சேர்ந்து கொண் டது. இந்திய அரசாங்கம் ஜுனாகத் மீது பொருளாதாரத் தடை விதித்ததும் அப்போ தைய நவாப் மூட்டை முடிச்சுகள், ராணி கள், நாய்க்குட்டிகளுடன் வெளியேறினார். இப்படி 1947-ஆம் வருடம் நவம்பர் 8-ஆம் தேதி ஜுனாகத் இந்தியாவுடன் இணைந் தது.

நம் ராணுவத்தின் பலத்தை எதிர்கொள்ள முடியாத ஹைதராபாத் நிஜாம் வேறு வழி யின்றி 1949-ஆம் வருடம் நவம்பர் 23-ஆம் தேதி இந்தியாவுடன் இணைந்தார். இப் படி முஸ்லிம்களுக்கு வரமாகவும் ஹிந்துக் களுக்கு சாபமாகவும் பாகிஸ்தான் பிறந் தது. இளம் ஹிந்துக்களே இதை நினைவில்

வைத்துக் கொள்ளுங்கள் முஸ்லிம்களே பாகிஸ்தானில் இருக்கலாம், ஹிந்துக்கள் அல்ல என்று விரட்டப்பட்டபோது இந்தியாவை ஹிந்துஸ்தானமாக அறிவித்துக் கொண்டு, 'முஸ்லிம்களே வெளியேறுங்கள், இங்கே இருப்பதென்றால் ஹிந்துக்களாக மாறுங்கள் என்று ஹிந்துக்கள் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அப்படிச் சொல்லவில்லை. ஹிந்துத் தலைவர்களுக்கு இருந்த பெருந்தன்மையும் சமய நல்லிணக்கக் கொள்கையும் அப்போது முடிவு செய்ய வேண்டியிருந்த முஸ்லிம் தலைவர்களுக்கு இல்லாமல் போனது நாட்டின் துரதிர்ஷ்டம்.

இந்தியாவில் தங்கியிருக்க விரும்பிய முஸ்லிம்கள் தங்களை நேஷனலிஸ்ட் முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டார்கள். "ஒன்று ஹிந்து அல்லது முஸ்லிம்; அடைமொழிகள் வேண்டாம். முஸ்லிம்கள் என்றால் அங்கே போங்கள், ஹிந்துக்கள் என்றால் இங்கே இருங்கள்" என்று அன்று நாம் துணிவுடன், நிர்தாட்சண்யத்துடன் சொல்லவில்லை. அதனால் இன்று சில முஸ்லிம் அமைப்புகள் பாகிஸ்தானிலிருந்து தாக்குதல்கள் நடத்துகின்றன. பாகிஸ்தான் தீவிரவாதிகளை வளர்க்கிறது, நம் மீது ஏவிவிடுகிறது.

நம் இளைஞர்களுக்கு இந்த உண்மைகள் தெரியாது. ஒரு அரசாங்கத்திடமிருந்து இன்னொரு அரசாங்கத்துக்கு நாடு

அப்படியே கைமாறியது போல நாம் சுதந்திரம் பெறவில்லை. அப்படியிருந்தால் படேல் பாடுபட்டு சமஸ்தானங்களை ஒன்று சேர்த்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஆளப்பட்ட தேசம் ஒரே இந்தியாவாக நம் வசம் வந்திருக்கும். இன்று காஷ்மீரின் கஷ்டங்களை நாடு சகித்துக்கொள்ள வேண்டிய நிலை இருந்திருக்காது.

நாடு சுதந்திரம் பெற்றபோது பாகிஸ்தான் பகுதியிலிருந்தும் எல்லைப்புறங்களிலிருந்தும் அடித்து விரட்டப்பட்ட ஹிந்துக்கள், படுகொலை செய்யப்பட்ட ஹிந்துக்கள், சொந்த நாட்டில் அகதிகள்போல் சோக வாழ்க்கை நடத்திய ஹிந்துக்கள் பற்றிய செய்திகள் இந்தத் தலைமுறைக்குத் தெரியாது. தமிழ் நாட்டு இளைஞர்களுக்கு இதுபற்றி எதுவும் தெரியாது. ஏனென்றால் எல்லா அக்கிரமங்களும் எல்லைப்புறங்களிலும் பாகிஸ்தானிலும்தான் நடைபெற்றன. அதைத் தெரிந்துகொள்ள 1947-ஐ ஒட்டிய வரலாற்றைக் கொஞ்சம் புரட்டிப் பார்ப்போமா?

## காஷ்மீரின் வரலாறு

சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைக்கும் அரும்பணியில் பெரும் சவாலாக இருந்தது காஷ்மீர். அந்தப் பொறுப்பு முதலில் சொதப்பல் மன்னன் ஜவஹர்லால் நேருவிடம் கொடுக்கப்பட்டது. இயல்புப்ப

டியே அவர் நிலைமையைச் சொதப்பினார். எனவே உள்துறை அமைச்சரும் இரும்பு மனிதர் என்று போற்றப்பட்டவருமான சர்தார் படேல் தலையிட வேண்டியதாயிற்று.

அப்போதைய காஷ்மீர் மன்னர் ஹரிசிங் தேசபக்தியுள்ள ஹிந்து. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சுதந்திரம் இணைப்பு பற்றிய அறிக்கையைப் படித்ததிலிருந்து அவர் குழம்பிப் போனார். மக்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள். பாகிஸ்தானுடன் சேர்ந்தால் சிறுபான்மை ஹிந்துக்கள் ஒடுக்கப்படுவார்கள். எல்லைப்புற மாநிலமான காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர்வது தேசப் பாதுகாப்புக்குக் குந்தகமாகும் என்பது அவருக்குப் புரிந்திருந்தது. இந்த நிலையில் சர்தார் படேலைச் சந்திக்க தன் பிரதிநிதியாக ராமச்சந்திர கக் என்பவரை தில்லிக்கு அனுப்பினார்.

அதே நேரம் பாகிஸ்தானுடன் சேரும்படிக் காஷ்மீர் மன்னர் ஹரிசிங்கைத் தூண்டினார் கவர்னர் ஜெனரல் மவுன்ட்பேட்டன். பாகிஸ்தானுடன் சேர்ந்தால், இந்தியா அதைத் தவறாக நினைக்காது என்று சர்தார் படேல் தன்னிடம் சொன்னதாகப் பொய் சொன்னார். மக்கள் தொகை விகிதப்படி காஷ்மீர் பாகிஸ்தானுடன் சேர்வதே புத்திசாலித்தனம் என்று வாதிட்டார். மவுன்ட்பேட்டனின் உதவியாளர்கள் லார்டு இஸ்மே, ஸ்ரீநகரில் வசித்த பிரிட்டிஷ்காரர்

வில்லியம் வெப் இருவரும் இந்த வகையில் மன்னருக்கு நெருக்கடி கொடுத்தார்கள். இடைக்கால ஏற்பாடாக மன்னர் ஹரிசிங் 'உள்ளது உள்ளபடியே இருக்கட்டும்' என்ற நிபந்தனையோடு பாகிஸ்தானுடன் சேர ஒப்பந்தம் செய்து கொண்டார். இந்த ஒப்பந்தம் பாகிஸ்தானுக்கு காஷ்மீர் மீது ஒரு பிடிமானம் தந்தது. அதை வகையாகப் பயன்படுத்திக்கொண்ட பாகிஸ்தான் காஷ்மீருடனான தபால் தந்தி சேவையை முடக்கியது. அதனால் காஷ்மீருக்குச் செல்ல வேண்டிய உணவு, பெட்ரோல், அடிப்படைத் தேவைப் பொருட்கள் தடுக்கப்பட்டன. அதை மண்ணின் மைந்தரும் ஜின்னாவின் எதிரியுமான ஷேக் அப்துல்லா எதிர்த்தார்.

சூழ்நிலை காரணமாகக் கடும் குழப்பத்தில் சிக்கிய மன்னர் எந்த முடிவுக்கும் வரமுடியாமல் பாரதத்துடன் இணைவதற்கு தயங்கினார். மன்னரின் மனதைப் புரிந்து கொண்ட சர்தார் படேல் அவருடன் பேச்சுவார்த்தை நடத்த ஸ்ரீ குருஜி கோல்வல்கரைத் தன் பிரதிநிதியாக அனுப்பினார். அவர் 1947, அக்டோபர் 17ஆம் தேதி ஸ்ரீநகரில் மன்னரைச் சந்தித்து, காஷ்மீர் தனி தேசமாக இருந்தால் என்ன ஆபத்துக்கள் வரும் என்பதை எடுத்துச் சொல்லி, பாரதத்துடன் சேர்ந்தால், காஷ்மீரின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும்

என்பதையும் விளக்கினார். காஷ்மீர் மக்களின் நலனை படேல் கவனித்துக் கொள்வார் என்று உறுதியளித்தார். இதனால் மன்னர் காஷ்மீரை பாரதத்துடன் இணைக்க சம்மதித்தார். தன் பணியை அக்டோபர் 19ம் தேதி முடித்து, தில்லி திரும்பிய ஸ்ரீ குருஜி கோல்வல்கர் காஷ்மீர் பாரதத்துடன் இணையத் தயார் என்பதை படேலிடம் சொன்னார்.

இதை மோப்பம் பிடித்த பாகிஸ்தான் அக்டோபர் 23ம் தேதி, ராணுவ ஜெனரல் அக்பர்கான் தலைமையில் பழங்குடியினர் கும்பலை காஷ்மீருக்குள் கலவரம் செய்ய அனுப்பியது. இந்தக் கயமைப் போருக்கு பிரிட்டிஷ் உளவுத் துறையும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகளும் துணையாக இருந்தார்கள் என்பது அரசியல், சமூக நாகரிகத்தின், ராஜரீகத்தின் மீதான வெட்கக்கேடான அத்துமீறல்.

இதற்கிடையே கில்ஜித் பிரதேச ராணுவ அதிகாரி மேஜர் பிரௌன், திடீரென்று காஷ்மீர் அரசிற்கு எதிராகக் கலகம் செய்து கில்ஜித் பிரதேசத்தை பாகிஸ்தான் வசம் ஒப்படைத்தார். காஷ்மீர்ப் படையின் கமாண்டராக இருந்த பிரிட்டிஷ் மேஜர் ஹெச்.எல். ஸ்காட், விசுவாசமில்லாமல் தன் படைகளைப் போர்க்களத்திற்கு அப்பால் நிறுத்தினார். அப்போது இந்திய ராணுவத் தலைமைத் தளபதியாயிருந்த ஜென

ரல் பாப் லாக்ஹார்ட் என்ற பிரிட்டிஷ்கா ரர் இந்திய அரசிற்கு இந்தப் படையெடுப்பு பற்றிய தகவல்கள் தெரியாதபடிப் பார்த்துக் கொண்டார்.

காஷ்மீரில், முஜாபராபாத் நகர முஸ்லிம் வீரர்கள் மாநில படாலியனிலிருந்து தங் கள் கமாண்டர் மற்றும் அவரது உதவியா ளரைச் சுட்டுவிட்டுக் கலகக்காரர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். அப்போது ஆக்கிர மிப்பாளர்கள் ஸ்ரீநகருக்கு மின்சாரம் தரும் மஹூரா மின் நிலையத்தைப் பாழ்படுத்தி நகரை இருளில் ஆழ்த்தினார்கள். காஷ் மீரை நரகமாக்கிய கொலைகளையும் கற் பழிப்புகளையும் பார்த்த ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் ஆக்கிரமிப்பாளர்களைக் ‘காட்டு மிருகங்கள்’ என்று வேதனையுடன் வர் ணித்தார்.

இந்த இக்கட்டினால் நொந்துபோன காஷ் மீர் மன்னர் தனக்குத் துருப்புகள் ஆயு தங்கள் அனுப்புமாறு தில்லிக்கு அவசரச் செய்தி அனுப்பினார். பாகிஸ்தானுக்கு உத வும் உள்நோக்கத்துடன் இருந்த மவுன்ட் பேட்டன் முழுத் தகவல் தெரியாமல் நடவ டிக்கை எடுக்கக்கூடாது என்று நம் தலை வர்களுக்கு நிர்பந்தம் கொடுத்தார். ஸ்ரீநக ரின் விபரீத நிலைமையை அங்கு சென்று ஆராய்ந்த படேலின் செயலாளர் வி. பி. மேனன் காஷ்மீரை ஆக்கிரமிப்பாளர்க ளின் பிடியிலிருந்து மீட்க உடனடியாக நம்

படையை அனுப்புவது அவசியம் என்றார். மறுபடியும் ஆட்சேபம் எழுப்பினார் மவுன்ட்பேட்டன். காஷ்மீர் முழுதுமாக இந்தியாவுடன் சேர்ந்த பிறகே இப்படிச் செய்ய வேண்டும் என்றார். காஷ்மீர் இந்தியாவுடன் சேர விரும்பினால் மக்கள் கருத்தை வாக்கெடுப்பு மூலம் அறிந்துகொண்டு முடிவுசெய்ய வேண்டும். ஆக்கிரமிப்பாளர்கள் அதுவரை காஷ்மீரிலேயே இருக்கட்டும் என்றார். அடடா, என்ன நல்லெண்ணம்! இவர்களைப் பற்றியெல்லாம் உயர்வாக நம் சரித்திரப் புத்தகங்கள் சொல்கின்றனவே!

நிலைமையை உணர்ந்து படேலின் உத்தரவுப்படி வி.பி.மேனன் காஷ்மீருக்கு விரைந்து இந்தியாவுடன் இணைவதற்கான ஆவணத்தில் காஷ்மீர் மன்னரின் கையொப்பத்தைப் பெற்றுத் திரும்பினார். இணைப்பை முழுமையாக்க இந்தியத் துருப்புக்களை காஷ்மீருக்கு அனுப்ப நினைத்தபோது பிரிட்டிஷார் முட்டுக்கட்டை போட்டார்கள். முப்படைத் தளபதிகளாக இருந்த பிரிட்டிஷ்காரர்களும் மவுன்ட்பேட்டனும் நம் துருப்புகள் எதிர்கொள்ளக்கூடிய ஆபத்துக்களைப் பெரிதுபடுத்தினார்கள். படேலின் தூண்டுதலால் நேரு உறுதியாக இருந்ததால், இந்தியப் படைகள் காஷ்மீருக்குப் பறந்தன. ஸ்ரீநகர் விமான தளம் அப்போது பனி மூடியிருந்தது. அதனால் ராணுவ விமானம் தரையி

றங்க முடியவில்லை.

ஆர்.எஸ்.எஸ். தொண்டு ஸ்ரீநகரின் அப்போதைய நிலவரம் ஒரே கலவரம். இதற்கிடையே ராஜா ஹரிசிங் பாதுகாப்பு கருதி ஜம்முவுக்குப் போய்விட்டார். துருப்புக்கள் ஸ்ரீநகர் விமான தளத்தில் இறங்கமுடியாத நிலையில் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் சிரமப்பட்டுப் பனிக்கட்டிகளை அகற்றி உரிய நேரத்தில் இந்திய விமானங்கள் தரையிறங்க உதவினார்கள். நம் ஜவான்கள் ஆக்கிரமிப்பாளர்களைத் துரத்தியபோதும் ஆர்.எஸ்.எஸ். உதவி தொடர்ந்தது. கோட்லி ராணுவப் பாசறையில் வெடிமருத்து தீர்ந்துவிட்டதும் பாரத விமானப் படை விமானங்கள் போட்டுச் சென்ற 20 வெடிமருந்துப் பெட்டிகள் ஒரு செங்குத்தான மலைச்சரிவில் விழுந்தன. அவற்றை மீட்கப்போனால் பாகிஸ்தானியர்களின் துப்பாக்கி குண்டுகளுக்கு இரையாக நேரிடும் என்பதால் கமாண்டர் ராணுவ வீரர்களை இழக்க விரும்பவில்லை. ஆனால் கிருஷ்ணலால் என்ற உள்ளூர் ஆர்.எஸ்.எஸ். தொண்டர் 20 ஸ்வயம்சேவகர்களுடன் சென்று 17 பெட்டிகளைக் கொண்டுவந்து சேர்த்தார். குழுவின் தலைவர் உள்பட ஆறு பேர் உயிரிழந்தார்கள். இந்தத் தியாகத்தினால் 6000 ஹிந்துக்களின் உயிரையும் மானத்தையும் காக்க முடிந்தது.

காஷ்மீர் மக்களின் எண்ணத்தை அறிய

ஐ.நா. சபை சார்பில் கருத்து வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று முன்பு சொன்னதை நவம்பர் 21-ஆம் தேதி மீண்டும் சொன்னார் நேரு. ஐ.நா.விலிருந்து ஒரு குழு 1948 டிசம்பர் மாதக் கடைசியில் தில்லியில் இந்தியத் தலைவர்களைப் பார்த்துவிட்டு, கராச்சி சென்று பாகிஸ்தான் தலைவர்களைச் சந்தித்தது. நிலைமை தங்களுக்குச் சாதகமாக இருப்பதாக நினைத்த பாகிஸ்தானிகள் உடனடியாக அதை ஏற்றுக் கொண்டனர். காஷ்மீரிலிருந்து பாகிஸ்தானிய ஆக்கிரமிப்பாளர்களை இந்திய ராணுவம் துரத்துவதற்கு முன்பே நேரு அபத்தமாக போர் நிறுத்தத்தை அறிவித்தார்.

பாம்போ பகைவனோ பூண்டோடு அழித்துவிடு என்ற சாணக்கியனின் அறிவுரை பிரதமர் நேருவிடம் எடுபடவில்லை. அதன் விளைவாக, இன்று வரை காஷ்மீரின் மூன்றில் ஒரு பகுதி பாகிஸ்தானிய ஆக்கிரமிப்பாளர்களின் பிடியிலேயே இருந்து வருகிறது. இப்போது வன்முறையின் அளவு கூடிக்கொண்டே போகிறது.

## அது என்ன 370-ஆவது பிரிவு?

ஜம்மு, காஷ்மீர் அன்றிலிருந்து இன்றுவரை பெரிய பிரச்சினையே. இந்தியாவுடன் சேர்ந்துவிட்டாலும் கூட இந்திய அரசியல் சாசனம் உருவாக்கப்பட்டபோதே பொது அரசியல் சாசனத்தைத் தாங்கள் ஏற்பதற்

கில்லை என்று அரசியல் சாசன நிர்ணய சபை உறுப்பினர்களாக இருந்த காஷ்மீரின் நான்கு பிரதிநிதிகள் தெளிவாகவும் உறுதி யாகவும் சொல்லிவிட்டார்கள்.

காஷ்மீர் இந்தியப் பகுதி ஆனாலும் சில அம்சங்களில் அரசியல் சாசனத்தி லிருந்து விதிவிலக்கு பெற்ற ஒரு தன் னாட்சிப் பகுதி என்ற வித்தியாசமான, வினோதமான நிலையை உருவாக்க அர சியல் சாசன நிர்ணய சபை உறுப்பினர் கள் மிகவும் தயங்கினார்கள். காஷ்மீருக் குச் சிறப்பு அந்தஸ்த்து தருவது பற்றி சபை யில் கடுமையான விவாதம் நடைபெற்றது. ஆனால் இதன் முழு விவரங்கள் கூட்டத் தின் நடைமுறை அறிக்கையில் குறிப்பிடப் படவில்லை. சபையின் முக்கிய உறுப்பின ராக இருந்த பி.ஆர். அம்பேத்கர் காஷ்மீர் தனி உரிமை பெறுவதை விரும்பவில்லை. முக்கிய கட்டத்தில் நேரு ‘நீங்கள் பார்த் துக் கொள்ளுங்கள்’ என்று சொல்லிவிட்டு வெளிநாட்டுக்குப் பயணப்பட்டதால் இதில் முடிவு செய்வது மற்றவர்களின் பொறுப்பா னது. என்ன பிரதமரோ அவர்!

“இந்தியா காஷ்மீரைப் பாதுகாக்க வேண் டும், காஷ்மீர் மக்கள் இந்தியக் குடிமக்கள் பெறும் அதே உரிமைகளைப் பெற வேண் டும் என்கிறீர்கள். ஆனால் இந்தியர்களுக் குக் காஷ்மீரில் எந்த உரிமையும் இருக்கக் கூடாது என்றும் சொல்கிறீர்கள். இதை ஏற்

கமுடியாது," என்று காஷ்மீர் விஷயமாகத் தன்னைச் சந்தித்த ஷேக் அப்துல்லாவிடம் அம்பேத்கர் கறாராகச் சொன்னார்.

சட்டத்துறை மந்திரி என்ற முறையில் காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்த்தை அம்பேத்கர் எதிர்த்ததையடுத்து காஷ்மீர் சம்பந்தமான உரிமைகளைப் பற்றிய சாசனப் பிரிவுகளை உருவாக்கும் பொறுப்பு கோபாலஸ்வாமி ஐயங்காரிடம் தரப்பட்டது. அவர் அன்று உருவாக்கிய அரசியல் சட்டப்பிரிவான 306-ஏ என்பதே பிறகு 370 என்று புதிய எண் பெற்றது. இந்த 370-ஆம் பிரிவைப் பற்றிய சர்ச்சை இன்னும் ஓயவில்லை. காஷ்மீருக்கு சலுகைகளைத் தரும் சில வாசகங்களை எழுதியபோது கோபாலஸ்வாமி ஐயங்கார் தன் பழைய விசுவாசப்படி காஷ்மீரின் முன்னாள் மந்திரியாகவே செயல்பட்டார் போலிருக்கிறது!

பாதுகாப்பு, அயலுறவு, நாணயம், தகவல் தொடர்பு தவிர காஷ்மீருக்கு மத்திய அரசுடன் தொடர்பு இல்லை. இந்தியா தரும் சலுகைகளை, உரிமைகளை அனுபவிக்கும் தனி நாடாக இருக்கிறது காஷ்மீர். சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவுகள் காஷ்மீருக்குப் பொருந்தாது. காஷ்மீர்ப் பெண்கள் வேறு மாநிலத்தவரை மணந்தால் சொத்துக்களை இழப்பார்கள். காஷ்மீர் ஆண்கள் எந்தப் பிரதேசப் பெண்ணை மணந்தாலும் எதையும் இழக்க மாட்டார்கள். அங்கே பிற

மாநிலத்தவர்கள் சொத்துக்கள் வாங்க முடியாது. இந்தியாவின் ஒரு பகுதியில் இந்தியர்கள் வீடு, மனை வாங்க முடியாது என்பது சொந்த நாட்டில் அந்நிய பூமி என்று ஜனநாயகத்திற்கு அவமானமல்லவா?

இங்கே மாநில அரசின் பதவிக்காலம் ஆறு வருடங்கள். மத்திய அரசின் தகவல் அறியும் உரிமைச் சட்டம், பொதுத் தணிக்கை, இவற்றிற்கு காஷ்மீரில் இடமில்லை. இந்தச் சலுகைகளினால் எல்லோரும் சமம். ஆனால் சிலர் கூடுதலாக சமம் என்ற விநோத நிலை உருவானது. ஜம்மு காஷ்மீர் அரசியல்வாதிகள் இந்தியா தரும் எல்லா சுகங்களையும் அனுபவித்துக் கொண்டு, சர்வ சுதந்திரமாக ஏறத்தாழ ஒரு தனி நாட்டினராக நடந்து கொள்கிறார்கள். அப்படித் தொடர்வதை விரும்புகிறார்கள். அதை வெட்கமில்லாமல் சொல்லிக்கொள்கிறார்கள். யார் எப்படி மறுத்தாலும் இதுதான் உண்மை.

அதீத உரிமைகளைத் தரும் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு ‘தற்காலிகமானது’ என்றார் அரசியல் நிர்ணய சபை உறுப்பிரான கோபாலஸ்வாமி ஐயங்கார். காலப்போக்கில் தற்காலிக நிலை கரைந்துவிடும் என்று 1963-ல் நாடாளுமன்றத்தில் பிரதமர் நேரு சொன்னார்.

மிட்டாய் கொடுத்தால்தான் வீட்டுக்குள் வருவேன் என்று அழுது அடம்பிடிக்

கும் குழந்தைக்குக் கேட்டதைக் கொடுத்து உள்ளே அழைத்து வரலாம். அறுபது வருடங்களுக்கும் மேலாக குழந்தை தினம் தினம் மிட்டாய் கேட்டு வாங்கிச் சாப்பிட்டு கொண்டிருக்கிறது என்றால் தவறு குழந்தை மீது மட்டுமல்ல, தகப்பன் மீதும் இருக்கிறது.

ஐம்பது வருடங்களுக்குப் பிறகு ‘தற்காலிகம்’ நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்ற தலைகீழ் கோரிக்கை ஏன்? இந்தக் கோரிக்கையை எழுப்புவது யார்? எதற்காக? காஷ்மீர் இந்திய மாநிலம்தானே, இந்திய அரசியல் சாசனம் காஷ்மீர் மாநிலத்தில் ஏற்கப்படாது என்றால் சாசனத்திற்கு என்ன மரியாதை? நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் இந்தக் கேள்விகளை எழுப்பவில்லை?

மத்திய அரசுக்கு முழுமையாகக் கட்டுப்படாத அதிக சுதந்திரமுள்ள மாநிலமாக காஷ்மீர் விளங்கக் காரணம் இடைக்கால நிவாரணமாக அது பெற்ற 370-ஆம் பிரிவு அரசியல் சாசன உரிமைகளே. காஷ்மீர் முதல்வர் மாநில சாசனத்தின் பேரில் உறுதிமொழி எடுத்துக்கொள்கிறார், நம் அரசியல் சாசனத்தின் மீதல்ல. தலைமை நீதிபதியும் மாநில சாசனத்தின் பேரிலேயே பதவிப் பிரமாணம் செய்து கொள்கிறார். அந்த மாநிலத்திற்கென்று தனிக் கொடி இருக்கிறது. மந்திரிகளின் வாகனங்களில் அந்

தக் கொடியே பறக்கிறது. அந்த மாநிலத்திற்கென்று தனி கீதம் உண்டு. இந்தியக் கொடியை, தேசிய கீதத்தை மதிக்காத மாநிலம் இந்தியாவில் இருக்கிறது என்றால் நம் இறையாண்மை எங்கே போயிற்று? ஜனநாயக நாட்டில் நடக்கக்கூடியதா இது? ஆனால் நடக்கிறதே.

காஷ்மீர் மாநிலப் பண்பாட்டைக் காக்க அரசியல் சாசனச் சலுகை வேண்டுமாம். ஏன் மற்ற மாநிலங்களுக்குத் தனியே பண்பாட்டுக் கூறுகள் இல்லையா? அவர்கள் எல்லோரும் காட்டுமிராண்டிகள் வர்க்கமா?

காஷ்மீர் அரசியல்வாதிகள் பேசுவதையெல்லாம் காங்கிரஸ் ஏற்றுக்கொள்வதற்கு அரசியலைத் தாண்டிய காரணங்கள் இருக்கலாம் என்பது பலரது வலுவான ஊகம். காஷ்மீரின் தனித்துவம் இந்திய இறையாண்மைக்குக் குந்தகம். இன்றைய நிலையில் இதை ஜனநாயக முரண், பாரபட்சமான நிர்வாகம் என்றே கருதவேண்டும். இந்தத் தனிச்சிறப்பு நிலை காஷ்மீர் மக்களுக்கோ பிற மாநில மக்களுக்கோ நன்மை செய்வதாகத் தெரியவில்லை.

## நேருவின் பாரபட்சம்

தான் பிரதமராக வேண்டும் என்பதற்காக ஜின்னா பாகிஸ்தான் கோரியது போலவே ஷேக் அப்துல்லா தான் தனிக்காட்டு ராஜா

வாக இருக்க விரும்பி காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து கேட்டுப் பெற்றுக் கொண்டார். அதற்காக அவர் நேருவைப் பிடித்துக் கொண்டார். இருவரும் சேர்ந்து சர்தார் படேலை ஒதுக்கினார்கள். அது நாட்டின் மாட்சிமையை ஒதுக்கிய, முன்யோசனையற்ற செயல் என்பதை வரலாறு இப்போது உணர்த்துகிறது.

"ஒரு மாநிலத்திற்கு எதற்குத் தனி அந்தஸ்த்து? நாடென்பது எல்லா மாநிலங்களும் சேர்ந்ததுதானே, எல்லா மாநிலங்களும் சமமாகத்தானே நடத்தப்பட வேண்டும்" என்று படேலும் பிறரும் கூறியதை ஷேக் அப்துல்லா ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. நேரு ஏன் அதே வழியில் சென்றார்? இதற்கு மவுன்ட்பேட்டன் துணையிருந்து ஏன் குட்டையைக் குழப்பினார் என்று கேட்டால் "எல்லாமே சதி" என்ற பதில்தான் கிடைக்கும்.

ரொட்டியின் எந்தப் பக்கத்தில் வெண்ணெய் தடவப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டிருப்பவன் கெட்டிக்காரன் என்று ஆங்கிலத்தில் ஒரு முதுமொழி உண்டு. அந்த வகையான கெட்டிக்காரரர் நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு. அவரது தகப்பனார் மோதிலால் நேரு வக்கீலாக இருந்து அதிகம் சம்பாதித்தார். அவரும் அப்படிச் சம்பாதித்திருக்கலாம்.

உடனடி வக்கீல் சம்பாத்தியத்தைவிட நீண்டகால அரசியல் பதவி மேலானது என்பதை உணர்ந்தேதான் நேரு அரசியலில் நுழைந்தார் என்று சிலர் சொன்னால் அது ஒதுக்கித் தள்ளிவிடக்கூடிய பார்வை அல்ல. அவர் அரசியலில் நுழைந்தது தவறல்ல. ஆனால் செயல்பட்டவிதம் தவறு.

நேரு மீது மயக்கத்தை ஏற்படுத்திவிட்ட காங்கிரஸ் கட்சிக்காரரர்களும் (காந்தி உள்பட) எழுத்தாளர்களும் பத்திரிகையாளர்களும், வரலாற்றாசிரியர்களும், பள்ளி ஆசிரியர்களும் நேருவைச் சரியாக எடை போடவில்லை. பிறந்த மண்ணுக்கும் இனத்துக்கும் நேரு துரோகம் செய்து விட்டார் என்ற மறுக்கப்பட முடியாத, மறக்கப்பட முடியாத உண்மையின் சோகமான உதாரணம் காஷ்மீர்.

நேருவைப் பற்றி பலர் மகிமையான புராணங்கள் எழுதியிருந்தாலும் அவரது வாழ்க்கையையும் அவர் செய்துள்ள வேலைகளையும் அலசிப் பார்த்தால் அவர் தன் வாழ்க்கை நெடுக, பதவி நெடுக தனக்குப் பிடித்த தனி நபர்களுக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை அரசாங்க அமைப்புகளுக்கும் தார்மீக நியதிகளுக்கும் கொடுக்கவில்லை என்பது புரியும். நேருவுக்கு ஷேக்அப்துல்லா நண்பர், மவுண்ட் பேட்டன் நெருக்கமானவர், மவுண்ட்பேட்டன் சீமாட்டி மிகவும் நெருக்கமானவர். காஷ்

மீர் என்ற பூமியோ அதன் பிரச்சினைகளோ, ஆட்சியோ அவருக்கு ஒரு பொருட்டல்ல. நண்பர்களே நாட்டை விட முக்கியம் என்று செயல்பட்டார் நேரு. சிலர் மீது எக்கச் சக்கமான அக்கறை கொண்டிருந்த நேரு வுக்கு சிலர் மீது காரணமில்லாத வெறுப்பும் இருந்தது. அவர்களில் முக்கியமானவர்கள் ராஜாஜியும் வல்லபாய் படேலும்.

நேரு யார் யாரை நம்பினாரோ அவர்களில் பலர் மோசமானவர்கள் என்பதை வரலாறு உணர்த்தியது. நேருவே மோசம் என்பது இப்போது தெரியவருகிறது. மன்னர் காலத் தில் ராஜ துரோகக் குற்றம் சாட்டப்பட்ட ஷேக் அப்துல்லாவின் வக்கீலாக இருந்தார் நேரு. அதன் விளைவை சுதந்திர இந்தியா வில் அனுபவித்தார். ஷேக் அப்துல்லாவை நேரு 1953ல் ராஜ துரோகக் குற்றத்திற் காகக் கைதுசெய்ய வேண்டியிருந்தது விதி. தலைவர் செய்யும் தவறுக்கு தேசம் தண் டனை அனுபவிக்கும் என்பதற்குச் சோக மான உதாரணம் நேருவும் காஷ்மீரும்.

காஷ்மீர் விஷயத்தில் படேலை நேரு ஒதுக் கிவிட்டார் என்பது படேலின் செயலாளராக இருந்த ஐஏஎஸ் அதிகாரி வி. சங்கர் எழு திய புத்தகத்திலிருந்து தெரிய வருகிறது. “படேல் காஷ்மீர் விஷயத்தை முழுமையாக கவனித்துவந்தார்” என்று படேல் இறந்தபி றகு நாடாளுமன்றத்தில் கபடமாகப் பொய் சொன்னார் நேரு. புகழ்வது போலப் பேசி

காஷ்மீரைத் தான் சொதப்பியதற்கான பழியைப் படேல் மீது சுமத்தினார், என்ன சாதுர்யம்!

ஆள்பவர்களின் தனிமனித விருப்பு வெறுப்புகளால் நாடு பாழ்படும் என்பதற்கு உதாரணமாக இருந்த நேருவை வரலாறு ஒரு உத்தம புருஷராகவே பதிவு செய்துள்ளது. காஷ்மீர் பிரதேசத்தின் ஆத்மா அவரை மன்னிக்காது. காஷ்மீர் பிரதேசத்தில் நடைபெற்ற கலவரங்களில் கஷ்டப்பட்டவர்கள், சொத்துக்களை விட்டுவிட்டு இடம் பெயர்ந்தவர்கள், குறிப்பாக பண்டிட்களின் ஆன்மா நேருவின் ஏழு தலைமுறைகளை சபிக்கும். அதன்பிறகு இந்திரா முதல் சோனியா வரை காஷ்மீரில் சொதப்பியதெல்லாம் தனிக்கதை. அவர்களின் ஏழேழு தலைமுறை

களும் இதனால் சபிக்கப்படும்.

ஐரோப்பாவில் யூதர்கள் ஓட ஓட விரட்டப்பட்டது போல காஷ்மீரிலிருந்து துரத்தப்பட்ட ஆயிரக்கணக்கான பண்டிட்டுகள் நொந்துபோன சொந்த நாட்டு அகதிகளானார்கள் ஜம்மு, காஷ்மீர், லடாக் பகுதியில் எல்லா மக்களும் முன்னேற வேண்டுமென்றால், காஷ்மீரின் ஆதிகுடிகளான பண்டிட்கள் சொந்த மண்ணுக்குத் திரும்ப வேண்டும், கௌரவமாக வாழவேண்டுமென்றால் பிற மாநில அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கு இருப்பது போன்ற பொறுப்பு

ணர்வு ஜம்மு காஷ்மீர் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் வர வேண்டும்.

எல்லாவற்றிற்கும் காரணம் மத்திய அரசாங்கத்தை ஆளும் காங்கிரஸ் அரசியல்வாதிகளுக்கு இடையிலான நேரடி மற்றும் நிழல் தொடர்புகளே. இரு தரப்பும் மக்களை கவனிப்பதில்லை. அவ்வப்போது கிடைக்கும் ஆதாயங்களே போதும் என்று இவர்கள் காஷ்மீரை விட்டுவிட்டார்கள், இல்லை, இல்லை, விற்றுவிட்டார்கள்.

## *அதிகாரத்தின் அக்ஷயபாத்திரம்*

'மக்களுக்காக மக்களை மக்களே ஆள்வது' என்ற ஜனநாயகம் பற்றிய விளக்கத்தை 'அரசியல்வாதிகளுக்காக அரசியல்வாதிகளை அரசியல்வாதிகளே ஆள்வது' என்று மாற்றிக் கொள்ளலாம், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தைப் பொருத்தவரை. அங்கு அதுதான் உண்மை. மற்ற மாநிலங்களிலும் ஏறத்தாழ இதே நிலைதான் என்றாலும் காஷ்மீர் அளவுக்கு நிதி நிர்வாகத்தில் எந்த மாநிலமும் மோசமில்லை. நம் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவு ஜம்மு, காஷ்மீருக்கு அளித்துள்ள அதிகார அக்ஷயபாத்திரமே அதற்குக் காரணம்.

எப்படிப் பார்த்தாலும் காஷ்மீர் அரசியல்வாதிகளின் மாநிலமே. அதனால்தான் தங்கள் மாநிலம் மக்களின் மாநிலம் என்று காஷ்மீர் மக்கள் சொல்லிக்கொள்ள முடிய

வில்லை. அங்கே இரண்டு மூன்று குடும்பங்களே ஆட்சியின் மொத்தக் குத்தகைதாரர்கள். அவர்களில் முதன்மைக் குடும்பம் ஷேக் அப்துல்லாவுடையது. அவர், அவருக்குப் பின் மகன் ஃபரூக் அப்துல்லா, அவருக்குப் பின் பேரன் ஒமர் அப்துல்லா. தந்தை மத்தியில் மந்திரி, மகன் மாநிலத்தில் முதல்வர். காஷ்மீரை அப்துல்லா மாநிலம் என்று பெயர் மாற்றம் செய்யாததுதான் பாக்கி. இவர்களுக்கு குழலூதும் காங்கிரஸ் கட்சி அதற்கும் ஒப்புக்கொண்டிருக்கும்.

அடுத்த குடும்பத்தின் தலைவர் சில வருடங்களுக்கு முன்பு காலமான பக்ஷி குலாம் முகமது. அவர் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்து அரசியலில் சேர்ந்து காஷ்மீரின் பிரதமரானவர் (அப்போதைய முதல்வர் பிரதமர் என்றே குறிப்பிடப்பட்டார்.) மூன்றாவது முஃப்டி முகமது சயீத் குடும்பம். இந்திய மக்கள் பிரநிதித்துவச் சட்டம் ஜம்மு காஷ்மீரில் ஏற்கப்படுவதில்லை என்பதனால் தில்லுமுல்லு அரசியல்வாதிகள் பிறர் தேர்தலில் போட்டியிட முடியாதபடி சாம, பேத, தான, தண்ட உபாயங்களைப் பின்பற்றி மாநிலத்தைத் தங்கள் வசமே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தமக்குள் நட்புடன் விரோதம், விரோதத்துடன் நட்பு என்ற வினோத உத்தியைப் பின்பற்றி மாநில வரிப் பணத்தையும் மத்திய அரசாங்கத்திலிருந்து கிடைக்கும் மானி

யத்தையும் இஷ்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். கூட்டுக் கொள்ளையில் இவர்களிடம் வலுவான ஒற்றுமை இருக்கிறது. பணத்தை வாணவேடிக்கைத் திட்டங்களில் செலவழித்து பொய்க்கணக்கு காட்டி உறவினர்கள் நண்பர்களுடன் பங்கிட்டுக் கொள்கிறார்கள் என்று பல வருடங்களாகவே குற்றச்சாட்டு இருக்கிறது. 370ஐ நீக்குவது பற்றிப் பேசினால் ஒன்றுசேர்கிறார்கள். காரணம் ஜனநாயகம் என்ற பெயரில் தாங்கள் நடத்தும் பணநாயக, சர்வாதிகார ஆட்சி பறிபோய்விடக் கூடாதே என்ற பயமே. சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்தே ஜம்மு காஷ்மீர் அரசியல்வாதிகள் ஊழல்வாதிகளாகவே இருந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

ஜம்மு காஷ்மீரின் 2012-2013 பட்ஜெட்டில் உத்தேச வரவு ரூ. 70,160 கோடி. இதில் மாநில வரவு பத்து சதவிகிதம் மட்டுமே. ஆக, 70,000 கோடி ரூபாய்க்கும் மேலான தொகையில் 700 கோடி ரூபாய் மட்டும் சொந்த வரவு. இப்படி இரவல் வாழ்க்கை வாழ்ந்துகொண்டு வருகிறது காஷ்மீர். தனக்கென்று உள்ள தனிப் பண்பாட்டைக் காப்பதற்காக அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவுச் சலுகைகள் வேண்டும் என்று நினைக்கிற அரசியல்வாதிகள் 90 சதவிகித மானியம் மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு வெட்கப்படுவதா

கத் தெரியவில்லை. வெட்கமும் ஒரு பண்பாட்டு அம்சம்தானே.

பணம் கொடுப்பதற்கு மட்டுமே கடமைப்பட்டுள்ள இந்திய அரசாங்கம் செலவைப் பற்றிக் கேட்பதற்கு உரிமையில்லாமல் இருக்கிறது என்பதே வேதனை. நம்முடைய சிகிநி - றிகிசி என்பதெல்லாம் அங்கே செல்லுபடியாகாது.

காஷ்மீர் அரசியல்வாதிகள் வெட்டிச் செலவு செய்ய உதவியாக இருப்பதா, இறுக்கிப் பிடிப்போமே என்று மத்திய அரசு நினைத்துச் செயல்பட்டபோது காஷ்மீர் ஆட்சியாளர்கள் மக்களுக்கு வசதிகள் செய்து கொடுக்காமல் அவர்களை இம்சைப்படுத்திப் பல வகைகளில் வரி வசூல் செய்தார்கள். பொருட்களுக்குத் தட்டுப்பாடு வந்தது. விலைவாசி உயர்ந்தது. இதெல்லாம் மக்களுக்குத்தான், அரசியல்வாதிகளுக்கு அல்ல. என்றும் எதைப் பற்றியும் கவலைப்படாமல் அவர்கள் சுகபோகங்களில் திளைத்திருக்கிறார்கள். மக்களைப் பற்றிக் கவலைப்படாமலேயே காஷ்மீர், அரசு சுங்க வரியை உயர்த்தியது. வரி செலுத்த மறுத்தாலோ, தாமதப்படுத் தினாலோ மக்களை அடித்து உதைத்துத் துன்புறுத்தியது. கொடுங்கோல் ஆட்சி என்றால் வேறு என்ன?

விவசாயம் ஏறத்தாழ நொடித்துப் போய் விட்டது. பழத் தோட்டங்களில் விளைச்சல்

குறைந்து வருகிறது. உரிமைக்குப் போராடி, சலுகைகள் கேட்ட மக்கள் மீது அரசாங்கம் அடக்குமுறையைப் பிரயோகித்தது. எங்கே, எப்போது எதற்காக வன்முறை வெடிக்கும் என்பது பிடிபடாத ஆபத்தான பகுதியாக இருக்கும் காஷ்மீருக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகம் வருவதில்லை அதனால் அந்தத் துறை மூலம் அதிக வருவாய் கிடைக்கவில்லை. படகு வீடுகள் பாலியல் கூடங்களாகி விட்டனவாம். காஷ்மீர் கலைப் பொருட்களை வாங்கும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து போய்விட்டது. காஷ்மீர் மக்களும் முன்பு போல வெளி மாநிலங்களில் தம் கலைப்பொருட்களை விற்கமுடியவில்லை.

இந்தக் கூத்தில் மக்கள் நல நிதி என்று பணம் புரட்ட முன்வந்த காஷ்மீர் அரசாங்கம் அரசு ஊழியர்கள் தங்கள் சம்பளத்தில் 12-ல் ஒரு பகுதியைத் தரவேண்டும் என்று நிர்பந்தித்தது. அதே நேரம் ரேஷன் பொருட்கள் விலையை 12.5 சதவிகிதம் உயர்த்தியது. மருத்துவ மனைகள் சரியாக இயங்கவில்லை என்று மக்கள் புகார் சொன்னால் அதை ஒழுங்குபடுத்தாமல் “ஆமாம், மருத்துவமனை சரியில்லை, மூடிவிடுவோம்” என்றது. அப்படியே மூடியது. இதனால் பள்ளிக் கூடங்கள் மோசம் என்று சொன்னால் பள்ளிக்கூடங்களும் மூடப்படும் என்ற பயத்தை அரசு ஏற்படுத்தியது.

மாநில மக்களிடமிருந்து ஏதோ கொஞ்சம் வரிப்பணம் வருகிறது. வளர்ச்சித் திட்டங்கள் அதிகம் இல்லாததனால் அதில் அதிக வரவு இல்லை, செலவும் இல்லை. பொய்க் கணக்கு காட்டி மத்திய அரசு தரும் மானியத்தை அப்படியே சுருட்டிக் கொள்ளும் சாமர்த்தியம் ஜம்மு காஷ்மீர் அரசியல்வாதிகளுக்கு இருக்கிறது. தரும் அரசுக்குத் தட்டிக் கேட்கும் அதிகாரம் இல்லை. குடித்து அழிப்பதற்கே மகன் பணம் கேட்கிறான் என்றாலும் தட்டிக் கேட்க முடியாத, அதற்கு அதிகாரமில்லாத தகப்பன் போல மத்திய அரசு இருப்பது கொடுமை.

அரசியல் சாசன சலுகைகள் காஷ்மீர் அரசியல்வாதிகள் சுகமாக வாழவே. அதை மக்கள் புரிந்து கொண்டார்களா, பிற மாநில அரசியல்வாதிகளும் புரிந்துகொண்டார்களா, அப்படிப் புரிந்து கொண்டால் அது பற்றி கவலைப் பட்டார்களா என்பது தெரியவில்லை. நாம் வளமாக வாழவில்லை, ஆள்பவர்கள் கொழிக்கிறார்களே என்று மக்கள் கொதிக்க வேண்டும். அவர்கள் கொதிக்காமல் இல்லை. கொதிப்பை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கிறார்கள். அவ்வளவுதான். அதை உணர்ந்துகொண்டு மக்கள் பக்கம் நிற்க வேண்டிய கட்டாயம் மத்திய அரசுக்கு இருக்கிறது. இந்திய யூனியனில் மாநில அரசாங்கம் சரியில்லை என்றால் நேரடியாகவோ, மறைமு

கமாகவோ மத்திய அரசிடம் முறையிடலாம் காஷ்மீரைப் பொருத்தவரை மத்திய அரசின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

மத்திய அரசு மட்டும் மிக அதிக அளவுக்கு மானியம் தராவிட்டால் ஜம்மு காஷ்மீரின் கதை கந்தலாகிவிடும். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பழைய கணக்குப்படி (2001-2002) அரசாங்க ஊழியர்களின் சம்பளச் செலவு ரூ. 2,829 கோடி. இதில் மாநில வரவு ரூ. 1,095 கோடி. ஊழியர்களின் சம்பளத்தைக் கூடக் கொடுக்க முடியாத அரசாங்கம் அங்கே என்ன நிதி நிர்வாகம் செய்கிறதோ?

நாட்டின் ஒட்டு மொத்த உற்பத்தியில் ஒரு சதவிகிதம் கூட காஷ்மீரிலிருந்து வரவில்லை. அரசாங்கம் வேலை வாய்ப்புகளைத் தருவதில்லை. தொழில், வியாபாரத்தை ஊக்குவிப்பதில்லை. இத்தனைக்கும் பிற மாநிலங்களுக்கு தருவதைவிட எவ்வளவோ அதிகமாக காஷ்மீருக்கு மானியம் தந்து வருகிறது மத்திய அரசு.

அறமில்லை, பொருளில்லை, இன்பமும் இல்லை. என்னதான் நடக்கிறது காஷ்மீரில்? இங்கே சீர்திருத்தத்திற்கான முதல் படி அரசியல்வாதிகளைப் பாதுகாத்து மத்திய அரசை அட்டையாக உறிஞ்சும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் அரசியல் சாசனப்படியான சிறப்பு அந்தஸ்த்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

மத்திய அரசு காஷ்மீருக்காக ரத்தத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பது விபரீதமான உண்மை. நாம் எதையுமே ஆய்வுபூர்வமாக அணுகுவதில்லை. உரிய தகவல்களைச் சேகரிப்பதில்லை. காஷ்மீர் அரசியல்வாதிகள் செய்து வருவது திட்டமிட்ட கொள்ளை. அவர்கள் மத்திய அரசின் கஜானாவிலிருந்து பணம் பெறுகிறார்கள் என்றால் மற்ற மாநில மக்கள் தரும் வரிப் பணத்தில் ஆதாயம் பெறுகிறார்கள் என்பதே உண்மை. தங்கள் மாநிலத்தில் தட்டிக் கேட்கத் துணிபவர்களையோ, 'நீ மட்டும் கொள்ளையடிக்கிறாயே' என்று கேட்பவர்களையோ கூட்டுக் களவாணிகளாக்கிக் கொள்கிறார்கள்.

அங்கே முறைப்படி தேர்தல்கள் நடத்தப்படுவதில்லை. எனவே மக்களின் வெறுப்பு வாக்குப் பெட்டிகளில் வெளிப்படுவதில்லை. அதனால் அங்கே ஆட்சி மாற்றம் சாத்யப்படவில்லை. அங்கே மக்கள் மீது அக்கறையில்லாத அரசியல்வாதிகள் பிறர் செல்வத்தில் வாழ்கிறார்கள்.

## *முன்னோர்கள் செய்த தவறு*

எவ்வளவோ குளறுபடிகள் இருந்தாலும் சட்டப்படி இந்திய அரசாங்கம் காஷ்மீரில் ஒன்றும் செய்ய முடியாமல் போவதற்குக் காரணம் 370-ஆம் பிரிவு உருவானபோது, வேண்டுமென்றோ, கவனக்குறை

வாகவோ சேர்க்கப்பட்ட, அல்ல, விடுபட்ட சில வாசகங்கள்தான். காஷ்மீர் அரசியல் வாதிகள் குயுக்தியாக நடந்துகொள்வார்கள் என்பதை ஊகிக்கமுடிந்திருந்தால் அரசியல் சாசனம் எழுதியவர்கள் இந்த 370ஆவது பிரிவை உருவாக்கியிருக்கமாட்டார்கள். காஷ்மீருக்கு சலுகைககள் அளிக்க முன் வந்தபோது வார்த்தைகளில் கவனமாக இருந்திருப்பார்கள். தம்மைப்போல் பிறரும் யோக்கியர்கள் என்று கருதிய பெரிய மனிதர்களை நினைத்து இன்று பரிதாபப்பட வேண்டியிருக்கிறது.

இந்திய சாசனத்தின் மாட்சிமையை அதே சாசனத்தின் ஒரு பிரிவின் சில வார்த்தைகள் குலைத்துவிட்டன.

காஷ்மீரின் சலுகைகள் தற்காலிகமானவை என்பதற்கு பதில் குறிப்பிட்ட காலம் வரை என்று அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள் உறுதியாகச் சொல்லியிருக்க வேண்டும். அந்தச் சலுகைகளை விலக்கிக்கொள்ளும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். நாடாளுமன்றத் தீர்மானத்துக்கு காஷ்மீர் சட்டமன்றம் ஒப்புதல் தரவேண்டும் என்பது நாடாளுமன்றத்தை மிஞ்சிய அதிகாரமாகிறது. இது இந்திய யூனியனின் மாட்சிமையைக் குலைக்கிறது. காஷ்மீரின் கூடுதல் அதிகாரம் கூட்டாட்சியில் ஒரு ஜனநாயக முரண். அந்தக் காலப் பெரியவர்

கள் விவரம் புரியாமல் ஏதோ சொல்லிவிட்டார்கள். நாடாளுமன்றத்தை மீறும் வகையில் காஷ்மீருக்குத் தரப்பட்டுள்ள அதிகாரம் ரத்து செய்யப்பட வேண்டும் என்று ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர முகாந்திரம் இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இதுவரை இப்படி யாரும் செய்யாததற்குக் காரணம் கூட்டாக ஆதாயம் பெறமுயன்ற காங்கிரஸ் தலைவர்களும் காஷ்மீர் தலைவர்களும் என்று சொன்னால் தவறாகுமா? இந்தப் பிரச்சினையை மக்கள் முன் பொது விவாதமாக வைத்து பிற கட்சித் தலைவர்களுடன் கலந்து ஆலோசித்து உரிய முடிவை மோடி அரசு எடுக்க முடியும் - எடுக்க வேண்டும்.

தன்னைப் பிணிக்கும் சங்கிலியைத் தானே எடுத்துத் தரும் யானையைப் போல இந்திய அரசியல் சாசனம் காஷ்மீரில் தனக்குத்தானே விலங்கிட்டுக் கொண்டு விட்டது. ஆனாலும் யானை திமிறினால் சங்கிலிக் கம்பத்தை வேருடன் பெயர்க்க முடியும், அது அவ்வளவு எளிதல்ல. ஆனால் முற்றிலும் சாத்தியமில்லை என்று சொல்லிவிட முடியாது.

இதற்கு ஏதாவது பரிகாரம் செய்ய வேண்டும் என்று முடிவு செய்த பிஜேபி அரசு தன் முதல் மந்திரிசபைக் கூட்டத்தில் இது பற்றி குறிப்பிட்டது. பிரதமர் அலுவலகத்

துணை மந்திரியும் ஜம்மு தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜிதேந்திர சிங் அரசியல் சாசனத்தின் 370ஆவது பிரிவு விவாதம் செய்யப்பட்டு மாற்றப்பட வேண்டியது என்பதை எச்சரிக்கையான வார்த்தைகளில் சொன்னார். உடனே வெடித்தார் காஷ்மீரின் முதல்வரும் ஷேக் அப்துல்லாவின் பேரனுமான ஒமர் அப்துல்லா. ‘காஷ்மீர் இந்தியாவிலிருந்து பிரியும் நிலை வரும்’ என்று எச்சரித்தார். அது அரசியல் சாசனத்தின் 370 ஆவது பிரிவு தந்துள்ள அபாயகரமான சலுகையின் தைரியத்தினால். ஒரு மாநில முதல்வர் “நாங்கள் இந்தியாவிலிருந்து பிரியநேரிடும்,” என்று பேசினால் அந்தப் பேச்சுக்காக அவர்மீது ராஜதுரோகக் குற்றம் சுமத்தி “தாத்தாவைப் போல நீயும் ஜெயிலில் இரு” என்று அரசு சொல்லியிருக்கவேண்டும். ஆனால் மோடி அரசு இதில் மௌனம் காக்கிறது, இந்த மௌனத்தின் அர்த்தம் பிறகு தெரியவரும்.

பாஜக காஷ்மீர் பிரச்சினையை திடீரென்று கையில் எடுத்துள்ளதாக யாரும் நினைக்க வேண்டாம். நேருவின் முதல் மந்திரிசபையில் உணவுத் துறை மந்திரியாக இருந்த டாக்டர் ஷ்யாமா ப்ரசாத் முகர்ஜி காங்கிரசிலிருந்து விலகி ஜன் சங் என்ற கட்சியை ஸ்தாபித்தார். அதுதான் பாஜகவின் தாய்க் கட்சி. “குடியரசுக்குள் இன்னொரு குடியரசா?” என்று கேட்டு காஷ்மீரின் தனி

அந்தஸ்த்தை எதிர்த்தார் அவர். தேசபக்த ரான, சிறந்த அறிஞரான அவரது மரணத் திற்கு விசாரணை இல்லை. ஆனால் அவர் அன்று எடுத்த முனைவு இத்தனை வருடங் களுக்குப் பிறகாவது வெற்றி பெற வேண் டாமா, நாட்டு நன்மைக்காக?

ஷ்யாமா ப்ரசாத் முகர்ஜி காஷ்மீருக்குச் சென்ற போது ஜம்முவில் தடுத்து நிறுத்தப் பட்டு நிஷாத் என்ற இடத்தில் ஒரு பங் களாவில் காவலில் வைக்கப்பட்டார். மறு மாதம் அவர் அங்கே மர்மமாக இறந்துபோ னார். மாரடைப்பு என்று காரணம் சொல் லப்பட்டது. நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதற்காக 370-ஆவது பிரிவை நீக்குவ தற்கு ஆதரவாக மக்கள் கருத்தை உரு வாக்க தேச பக்தர்கள் எல்லோரும் பாடு பட வேண்டும். அந்த மாநில அரசியல்வா திகளிடமிருந்து எவ்வளவு எதிர்ப்பு இருந் தாலும் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவை நீக்கி காஷ்மீர் பிற மாநிலங்களை விட மேலானதல்ல என்ற நிலையை உரு வாக்க வேண்டும்.

வீட்டுக்குள் வர மறுத்து வெளியே இருந்த படி அழும் குழந்தையை உள்ளே கொண் டுவர மிட்டாய் கொடுத்து அழைக்கலாம். உள்ளே வந்த பிறகும் அந்தக் குழந்தை ‘என்னைத் தோளில் தூக்கி வைத்துக் கொள்’ என்று அடம் பிடித்தால் போனால் போகிறதென்று தந்தை சிறிது நேரம் தூக்கி

வைத்துக் கொள்ளலாம். 'காலம் பூராவும் தூக்கி வைத்துக்கொள்; இல்லையென்றால் அடிப்பேன், கடிப்பேன், பக்கத்து வீட்டுக் காரனுடன் சேர்ந்து மிதிப்பேன்' என்று மிரட்டினால் தோளில் இருப்பது குழந்தை தானா என்ற சந்தேகம் தந்தைக்கு வர வேண்டும். மத்திய அரசு என்ற தந்தைக்கு அந்தச் சந்தேகம் வந்ததா? வரவில்லை என்றாலும், வந்து சும்மா இருந்தாரென்றா லும் தந்தை மீது தவறு. பிற குழந்தை கள் 'தந்தையே உங்கள் பணமும் கவனமும் அவன் மீதே இருக்கிறது. அவனை இறக் கிவிடுங்கள். எங்கள் எல்லோரையும்போல அவன் நடந்து கொள்ளட்டும். அவனுக்கு எதற்குத் தனிச் சலுகை என்று கேட்டால் அது ஜனநாயக முதிர்ச்சி. அந்த நிலைமை விரைவில் வருவது நல்லது.

பிற மாநில மக்கள் புரிந்துகொள்ள வேண் டிய உண்மை பாகிஸ்தானுக்கு நெஞ்சும் இந்தியாவுக்கு வயிறும் என்று வாழ்பவர்கள் தங்கள் சுயநலத்திற்காக என்ன வேண்டு மானாலும் செய்வார்கள் என்பதே. இந்த நேரத்தில் காஷ்மீர் தீவிரவாதிகளின் இலக் குகள் பற்றி வி.பி.மேனன் அன்றே சொன் னது கவனத்திற்குரியது. 'இன்று ஸ்ரீநகர், நாளை தில்லி.' இன்று ஸ்ரீநகரைக் குறி வைத்துள்ளவர்கள் நாளை தில்லி நோக்கிச் செல்வதற்குள் செய்ய வேண்டியது என்ன? வேறென்ன. அரசியல் சாசனத்தின் 370-

ஆவது பிரிவை நீக்க வேண்டியதே.

இந்த 370-ஆவது பிரிவு நாட்டுக்கு ஒரு புற்று நோய்க் கட்டி. அதை உடனே அகற்ற வேண்டும். காஷ்மீருக்குச் செய்யும் ஆபரேஷன் இந்தியாவுக்கே நல்லது, உடலில் ஏதாவது ஒரு பாகத்தில் உள்ள கட்டியை அகற்றினால் நோயாளிக்கு நல்லது என்பதுபோல. ஆபரேஷன் உத்திகள் இப்போது மோடியின் வசம்.

## *நிச்சயம் முடியும்*

விவாதம் தொடங்கலாம் என்றபோதே எதிர்ப்பு என்றால் விவாதித்து ஒருமித்த முடிவுக்கு வந்து 370-ஆவது பிரிவை நாடாளுமன்றம் நீக்குவது சாத்தியமா? இன்றைய நிலையில் அது சாத்தியம் என்று தோன்றவில்லை. ஆனால் சாத்தியப்படாது என்று விரக்தியுடன் சொன்னால் வரலாறு படைக்க முடியாது. வரலாறு நம்மை மன்னிக்காது. காஷ்மீரை நம் வரலாற்றிலிருந்தும் பூகோளத்திடமிருந்தும் விடுவித்துவிட முடியுமா?

மோடியின் செல்வாக்கினால் நாடாளுமன்றத்தில் பாஜக காஷ்மீர் நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றி சட்டமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை வெற்றியாக எதிரொலிக்க முடியுமென்றால் அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவை முற்றிலுமாக, நிரந்தரமாக விலக்கிக் கொள்வது எளிதா

கும்.

மத்திய அரசின் சட்டங்களுக்கு உட்பட்டது தான் காஷ்மீர். அது இந்த நாட்டு மாநிலங்களில் ஒன்றுதானே என்று விவரமறிந்தவர்கள் கேட்டால், 60 வருடங்களாக இருந்து வரும் சலுகைகளை விலக்கிக் கொள்வதா என்று காஷ்மீர் அரசியல்வாதிகள் என்று எதிர்க்கேள்வி போடுகிறார்கள். தற்காலிகமான இடைக்கால ஏற்பாடு என்பது 60 மாதங்கள் தொடர்வதே அதீதம். அறுபது வருட காலம் தொடர்வது ஜனநாயகத்திற்கு மாபெரும் அநீதி என்று ஜனநாயகத் தாய் சொல்கிறாள். காஷ்மீர் மக்கள் பெறுவதாகச் சொல்லப்படும் சலுகைகள் என்ன, அவர்கள் அசலாகப் பெறுவது என்ன, மற்ற இந்தியர்களுக்கு காஷ்மீரில் பறிபோகும் உரிமைகள் என்ன என்பது மக்களுக்கு நன்றாகப் புரிந்தால் 370க்கு எதிராக வலுவான பொதுஜன அபிப்பிராயம் உருவாகும்.

ஒருகாலத்தில் அச்சத்துடனும் தீர்க்கதரிசனத்துடனும் அம்பேத்கர் சொன்னதை அடுத்த சில வருடங்களில் ஜன்சங்கை ஸ்தாபித்த ஷ்யாமா ப்ரஸாத் முகர்ஜி சொன்னதை இன்று அப்படியே சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார் ஜன்சங்கிலிருந்து உதித்த பாஜகவின் பிரதமராக உள்ள நரேந்திர மோடி.

ஆங்கிலத்தில் ஙிகூ்மீணீளீவீஸீரீ tலீமீ மிநீமீ என்று சொல்வார்கள். மௌனத்

தைக் கலைப்பது, புதுப் பாதை தேடுவது என்று அதற்குப் பொருள் கொள்ளலாம். மோடி அரசு செய்ய வேண்டியது மௌனத் தைக் கலைப்பது அல்ல. அதுதான் எல் லோரும் கத்திக் கொண்டிருக்கிறார்களே. இந்தக் கூத்தின் கூச்சலை அடக்கி, அர்த் தமுள்ள மௌனத்தை உருவாக்குவது. அதன் முதல்படி 370-ஆவது பிரிவு பற்றி நாடு நெடுக பொது மக்களிடம் விவாதம் நடத்துவது.

இந்த விஷயத்தை நாடாளுமன்றத் தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னதாக பிரதமரோ அவர் சார்பில் பிர தமர் அலுவலக அமைச்சரோ அனைத்துக் கட்சித் தலைவர்களுடனும் நட்பு ரீதியாக, அரசியல் வேறுபாடுகளைத் துறந்து, பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். அப்போது ஆம், ஏன் அந்த மாநிலத்திற்கு மட்டும் இப்படி ஒரு தனிச் சலுகை, இத்தனை வருடங்களாக அங்கே பயன் பெற்றது அங் குள்ள அரசியல்வாதிகள்தானே, மக்கள் அல்லவே என்பதைப் பிற மாநில அரசியல் வாதிகள் யோசித்துப் பார்ப்பார்கள். நாடா ளுமன்ற விவாதம் அங்கே 370-ஆவது பிரிவு நீக்கத்திற்கு ஆதரவாக அமையும். ஆனால் நாடாளுமன்ற விவாதத்துடன் 370-ஆம் பிரிவு மரித்துவிடாது. அதன் உயிர்நிலை ஜம்மு காஷ்மீர் சட்டமன்றத்தில் இருக்கி றது. இதை எப்படிச் செய்வது? இங்குதான்

உதவிக்கு வருகிறது புராணத்தின் பஸ்மா சுரன் கதை. காஷ்மீருக்குப் போவதற்குள் கதைக்குள் போகலாமா? மறந்திருப்பவர்க ளுக்கு நினைவூட்டுவதற்காக.

பஸ்மாசுரன் தீவிர சிவ பக்தன். யார் தலையைத் தொட்டாலும் அவர் சாம்ப லாக வேண்டும் என்பது அவன் பரமசிவ னிடமிருந்து பெற்ற வரம். அங்கே இங்கே என்று சில தலைகளைத் தொட்டு பஸ்ப மாக்கி விட்டு சிவன் தலையில் கைவைக்க, அவரைத் துரத்த, பரமசிவன் ஓட, கடவுள் தந்த வரம் கடவுளையே துரத்த, கொடுத்த வரத்தைத் திரும்பப் பெறமுடியாத நிலை யில் ஆபத்பாந்தவனாக வந்த மகாவிஷ்ணு மோகினி அவதாரம் எடுத்து பஸ்மாசுரனை மயக்கினார். அவனுடன் நடனமாடினார். ஒரு கட்டத்தில் நடன அபிநயங்களில் ஒன் றாக மோகினி தன் தலையில் வைக்க, நட னத்தை லயித்துப் பின்பற்றிய பஸ்மாசுர னும் தன் தலையில் தானே கை வைக்க, அந்த க்ஷணம், அந்த இடத்திலேயே அவன் சாம்பலானான். காஷ்மீர் பெற்ற அரசியல் சாசனத்தின் 370-ஆவது பிரிவின் சலுகை பஸ்மாசுரன் பெற்ற வரம் போல் அழிய வேண்டியது.

இப்போதைக்கு நம் மகாவிஷ்ணு நரேந்திர மோடி. அவர் இனி ஆடப்போகிற மோகி னியாட்டமே ஜம்மு காஷ்மீரின் சட்டமன் றத் தேர்தல். அந்தத் தேர்தலில் தேசிய

மாநாடு, காங்கிரஸ் மற்றும் உதிரிக் கட்சி களை ஒதுக்கிவிட்டு அந்த மாநில மக்கள் பாஜகவை அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுத்தால் 370-ஆம் பிரிவை நீக் கும் மசோதாவுக்கு சட்டமன்றம் ஒப்புதல் அளிக்கும். அன்றைய தினம்தான் பஸ்மாசு ரனின் சுயதகன தினம்.

முதல் கட்டமாக 370-ஆவது பிரிவு நீக்கப்ப டுவது பற்றி நாடு நெடுக ஆதரவான பொது ஜன அபிப்பிராயம் உருவாக வேண்டும். அரசியல் கட்சிகள் நாட்டின் நலன் கருதி, கட்சி வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து 370 நீக்க மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முன்வர வேண்டும். பிரதமர் பிற அரசியல் கட்சித் தலைவர்களு டனும் இது பற்றிப் பேசவேண்டும். அந்தத் தலை வர்களும் தம் மத உணர்வுகளை மறந்து நாட்டின் ஒற்றுமையையும் இறையாண்மை யையும் மேலாக நினைத்துத் தம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காஷ்மீருக் கான தனிச் சலுகைகள் நீக்கப்பட வேண் டும் என்ற மசோதா வுக்கு ஆதரவளிக்க வேண்டும். அரசியல் தலைவர்களுக்கு உள்ள பெரிய கவலை முஸ்லிம்களின் வாக்குகள் போய் விடுமோ என்பது. நம் முஸ்லிம்கள் முதலில் இந்தியர்கள், பிறகே முஸ்லிம்கள். இந்த எண்ணத்தை அவர்க ளிடம் ஏற்படுத்த முடியுமானால் இது சாதக மாகும். சுதந்திரம் பெற்ற பிறகு இங்கே தங்

கிய முஸ்லிம்கள் தம்மை இந்தியர் களாகத் தானே சொல்லிக் கொண்டார்கள்? தம்மை அவர்கள் எப்போதும் இந்தியர்களாகவே நினைத்துக் கொண்டால் காஷ்மீரில் மட்டு மல்ல, நாட்டில் வேறெங்கும் எந்தப் பிரச் சினையும் இருக்காது. இதை எடுத்துச் சொல்ல வேண்டியது தேசபக்தி உள்ள அர சியல்வாதிகள் கடமை. மோடியின் வேலை மட்டுமல்ல.

ஜம்மு காஷ்மீர் மக்கள் தம் மாநில அர சியல்வாதிகளால் எப்படிச் சுரண்டப்படுகி றார்கள் என்பதை எடுத்துச் சொன்னால் ஆட்சி மாற்றம் நிகழும். ஆட்சி மாறினால் காட்சி மாறும். உத்திகளை வகுத்து, பொரு ளாதாரப் புள்ளி விபரங்களைக் காட்டி, சக அரசியல்வாதிகளுடன் சாதுர்ய மாகப் பேசி மோடி அரசு காரியத்தை சாதிக்க வேண்டும். அப்போதுதான் ஜம்மு காஷ்மீ ரில் வெண்தாமரையான கல்வி பெருகும். செந்தாமரையான செல்வம் பெருகும். அது அவர்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல் லது.

பாரத் மாதாகீ ஜே...